**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.50/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹரி | மதம் | : இந்து |
| த/பெ | : பக்தவட்சல ரெட்டி | ஜாதி | : – |
| வயது | : 33 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**10.03.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்ட வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரமாண வாக்குமூலம் பத்தி 6 ல் ஆதிசேஷரெட்டி என்பவருக்கு சீனிவாச ரெட்டி, கிருஷ்ணா ரெட்டி, செங்கா ரெட்டி வாரிசுகள் என்று நான் கூறியிருப்பதற்கு ஆதரவாக நான் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆதிசேஷரெட்டியின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1ஆன 05.11.1951 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் ஆவணம் இல்லை. எனவே நகல் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ 1 பற்றி எனது எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1ல் சேஷய்ய ரெட்டி என குறிப்பிடப்பட்டுள்ளதா அல்லது ஆதிசேஷரெட்டி என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆதிசேஷரெட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள தமிழ் மொழிபெயர்ப்பில்தான ஆதிசேஷரெட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அசல் தெலுங்கு ஆவணத்தில் சேஷய்ய ரெட்டி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவர் பெயர் சேஷா ரெட்டிதான். அப்போது ஆதிசேஷரெட்டி என்பது தவறா என்றால் ஆதிசேஷரெட்டி தான் சரியானது. சேஷய்யா என்பதுதான் தவறானது. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் புல எண்.114 ல் 12 செண்ட் என உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 1 ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் நான்

வழக்கிற்காக பொய்யான ஆவணத்தை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

3. புல எண்.114 ல் 12 செண்ட் நிலத்தை சீனிவாச ரெட்டிக்கு ஒதுக்கப்பட்டது என்பதை காட்டும் ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பி.வா.சா.ஆ 1 முதல் 3 ஆவணங்கள்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் சொல்வதுபோல் வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சொத்தை சீனிவாச ரெட்டி அனுபவித்து வந்தார் என்பதை காட்ட அவர் பெயரில் அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அடங்கல் தாக்கல் செய்யவில்லை. சீனிவாச ரெட்டி இறந்த பின்பு அவரது வாரிசுகள் அனுபவித்து வந்தார் என்பதை காட்ட அவர் பெயரில் அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அடங்கல் கொடுக்கமாட்டார்கள்.

4. பி.வா.சா.ஆ 2 மின் கட்டண ரசீது எண்.54 சீனிவாச ரெட்டி என உள்ளது என்றாலும் அதில் தகப்பனார் பெயர் இல்லை என்றாலும் சரிதான். 1966 ல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்பதை காட்ட மின்வாரியத்தில் இருந்து கொடுக்கப்பட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் மின் கட்டண அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மின் இணைப்பு எண்.54 வழக்கு சொத்துக்குரியது என்பதை காட்டும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)